### சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்புத் தொகை ;

# மகளிர் உழைப்பு மீது ‘திராவிட மாடல்’ அரசின் நம்பிக்கைத் தொகை!

## காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

காரைக்குடி,செப்.12-

**காரைக்குடியில், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா – மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரையாற்றினார்.**

**அப்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**



**நலத்திட்ட உதவிகள்**

இந்த நிகழ்ச்சியின் மூலமாக சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 874 கிராம ஊராட்சி மன்றங்களுக்கு கிட்டத்தட்ட ஆயிரம் எண்ணிக்கையிலான `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’, 385 பேருக்கு வீட்டு மனை பட்டாக்கள், கூட்டுறவுத்துறை சார்பாக, 10 கோடியே 58 லட்சம் ரூபாய் பயிர்க்கடன், 158 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பு, அரசின் பல்வேறு துறைகளின் கீழ் மொத்தம் 1,250 பயனாளிகளுக்கு 14 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

**12,525 கிராம ஊராட்சிகள்**

தமிழ்நாட்டில் இருக்கின்ற 12,525 கிராம ஊராட்சிகளுக்கும் 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், கடந்த பிப்ரவரி மாதம் மதுரையில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டம்தான் இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்.

இதுவரை 11 மாவட்டங்களில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளுக்கும் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை அளித்திருக்கிறோம். இன்றைக்கு சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

**பரிசுத் தொகை ரூ. 37 கோடி**

சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், எந்த அளவிற்கு வீரத்திற்கும் தியாகத்திற்கும் பெயர்போன மாவட்டங்களோ அதே அளவிற்கு விளையாட்டுத் துறையிலும்சிறந்துவிளங்குகின்ற மாவட்டங்கள். அதனால்தான் இன்று, முதலமைச்சர் கோப்பை-2024 போட்டிகளை ஒரு பகுதியாக, இன்று (செவ்வாய்க்கிழ்மை) காலை சிவகங்கை மாவட்டத்தில், மாவட்ட அளவிலான போட்டிகளை நானே நேரடியாக வந்து தொடங்கி வைத்தேன். இந்த வருடம் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளுக்கான பரிசுத் தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் 37 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குக்கூட, விளையாட்டுத் துறைச் சாதனையாளர்கள் வந்திருக்கிறார்கள். இராமநாதபுரத்தைச் சேர்ந்த டென்னிஸ் வீரர் தம்பி நந்தகிஷோர் இங்கு வருகை தந்திருக்கிறார். தன் பள்ளிக் காலத்திலிருந்தே டென்னிஸ் விளையாட்டில் தம்பி நந்தகிஷோர் பல சாதனைகளைப் படைத்து வருகிறார். தேசிய, மண்டல மற்றும் கேலோ இந்தியா எனப் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார் தம்பி நந்தகிஷோருக்கு அனைவரின் சார்பாக நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

**சாதனைப் பயணம் தொடரட்டும்**

சிவகங்கையைச் சேர்ந்த தம்பி ப்ரனேஷ்குமார் அவர்களும் இங்கு வருகை தந்துள்ளார்கள். தமிழ்நாட்டின் 28-வது கிராண்ட் மாஸ்டர். தம்பி ப்ரனேஷ் சர்வதேச செஸ் போட்டியிலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து, பதக்கங்களைத் தொடர்ந்து வென்று வருகிறார். அவரின் கோரிக்கை எலைட் ஸ்கீம்சில் அவரின் பெயரைச் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். விரைவில், அந்த கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரு விளையாட்டு வீரர்களின் சாதனைப் பயணம் தொடரட்டும். இருவருக்கும் நம் திராவிட மாடல் அரசும், நம் விளையாட்டுத்துறையும், நம் முதலமைச்சர் அவர்களும் என்றைக்கும் துணை நிற்பார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த இரண்டு பேர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உலகம் முழுவதும் பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து படைத்து வருகிறார்கள். பாரீஸில் சமீபத்தில் நடந்த `பாரா ஒலிம்பிக் போட்டி’யில் தமிழ்நாட்டில் இருந்து 6 வீரர்களை நாம் அனுப்பி வைத்தோம். அந்த ஆறு வீரர்களுக்கும், நம் முதலமைச்சர் அவர்கள், விளையாட்டுப் போட்டிக்கு செல்வதற்கு முன்பாகவே ஊக்கத்தொகையாக 7 லட்சம் ரூபாய் அளித்தார்கள். அந்த 6 பேரில் இன்றைக்கு 4 பேர் வெற்றிபெற்று, பதக்கத்துடன் திரும்பி வந்திருக்கிறார்கள். விரைவில், நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு திரும்பியதும், அந்த ஆறு பேருக்கும் உயரிய ஊக்கத்தொகை வழங்க இருக்கிறார்கள்.

**பார்முலா– 4 கார் பந்தயம்**

உலகமே வியக்கின்ற வகையில், தெற்காசியாவிலேயே முதன் முறையாக சென்ற வாரம் பார்முலா-4 இரவு நேர கார் பந்தயத்தை சென்னையில் மிக வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். கடந்த ஜனவரி மாதம் `கேலோ இந்தியா இளையோர் போட்டிகளை வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் நடத்திக் காட்டினோம். அந்த கேலோ இந்தியா போட்டியில், 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு முதன்முறையாக பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. இப்படி விளையாட்டுத் துறையின் சாதனைகளை, தமிழ்நாட்டின் சாதனைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

> *முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில், எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும், விளையாட்டுத்துறை சார்பாக முதன்முறையாக கலைஞர் பெயரால், ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால், அது இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்தான்.*

நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை எடுத்து வரும் முயற்சிகளுக்கு பல்வேறு திசைகளில் இருந்து பாராட்டுகளும் குவிந்து வருகின்றன. சில மாதங்களுக்கு முன்பு, நம் விளையாட்டுத்துறையைப் பாராட்டி, `கான்பிடரேசன் ஆப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ்’ என்ற அமைப்பு `பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஆஃப் ஸ்போர்ட்ஸ்’ என்ற உயரிய விருதைக் கொடுத்து, நம்மைக் கௌரவித்தது.

தி இந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார் பத்திரிக்கை சார்பாக, `பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோடிங் ஆப் ஸ்போர்ட்ஸ்’ எனும் உயரிய விருதைக் கொடுத்து தமிழ்நாடு அரசைக் கௌரவித்தார்கள்.

தமிழ்நாடு சேம்பியன்ஸ் அறக்கட்டளையைத் தொடங்கி, அதன் மூலம் ஏராளமான ஏழை, எளிய, மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறோம். தமிழ்நாடு சேம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம் நிதியுதவி பெற விரும்புகின்ற விளையாட்டு வீரர்கள், டி.என்.சி.எஃப் (TNCF) என்ற இணையதளத்தில் எப்போது வேண்டுமானாலும், விண்ணப்பிக்க லாம்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நம் வீரர், வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்று வருடங்களாக உயரிய ஊக்கத்தொகையை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**உயரிய ஊக்கத்தொகை**

இந்த மூன்று வருடங்களில் மட்டும், கிட்டத்தட்ட 1,300 விளையாட்டு வீரர்களுக்கு 31 கோடி ரூபாய்க்கும் மேலான உயரிய ஊக்கத்தொகையை வழங்கி இருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். அரசு மற்றும் அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று பல்வேறு வருடங்களாக விளையாட்டு வீரர்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

கழக அரசு அமைந்த பிறகு, முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளின் காரணங்களால் முதற்கட்டமாக 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பினை முதன்முறையாக வழங்க இருக்கிறோம், என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு, மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன்.

விளையாட்டுத்துறை வளர்ச்சி வெறும் நகரங்களுடன் தேங்கிவிடக்கூடாது என்பதற்காக, கிராமங்களுக்கும் விளையாட்டு வீரர்களின் வளர்ச்சி, விளையாட்டுத்துறையின் வளர்ச்சி சென்றடைய வேண்டும் என்ற முயற்சியாகத்தான், இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தைத் தொடங்கி வைத்தோம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில், எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும், விளையாட்டுத்துறை சார்பாக முதன்முறையாக கலைஞர் பெயரால், ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால், அது இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்தான்.

**இந்தியாவிலேயே தலைசிறந்த வீரர்**

கலைஞரின் பெயரை இந்தத் திட்டத்திற்கு சூட்டியதற்கான காரணம். ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கக்கூடிய அத்தனை குணங்களும், திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதுதான் அவரின் சிறப்பு. அதனால்தான் யாராலும், எப்போதும் வீழ்த்த முடியாத ஒரு அரசியல் வீரராக கலைஞர் அவர்கள், இந்தியாவிலேயே தலைசிறந்த வீரராக திகழ்ந்து வந்தார்.

அத்தகைய கலைஞர் அவர்களின் பெயரால், இந்த விளையாட்டு உபகரணங்கள் இன்று வழங்கப்பட உள்ளன. எனவே, இவற்றைப் பெறக்கூடிய இளைஞர்கள், கலைஞர் அவர்களுக்கு இருந்த குணங்களையும், திறமைகளையும் நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை பெற வந்த, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளையும், அந்த ஊராட்சிகளின் முகங்களாக வந்திருக்கின்ற மாணவர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும், இளைஞர்களுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு கிட்டத்தட்ட 385 பயனாளிகள், பட்டா பெற வந்துள்ளீர்கள். பட்டா பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதில், நம் திராவிட மாடல் அரசு, ஆரம்பத்திலிருந்தே உறுதியாக இருந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 20 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்களை தலைநகர் சென்னையில் மட்டும் கொடுத்திருக்கிறோம். அந்த வகையில், இங்கு வீட்டுமனை பட்டா பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வங்கிக்கடன் இணைப்புகள்**

நம் அரசு அமைந்தது முதல், யாருக்கு என்ன தேவை இருக்கிறது என்பதை, ஆராய்ந்து திட்டங்களை வகுத்து வருகிறது. இங்கு கூட்டுறவுத் துறை சார்பாக, பயிர்க்கடன், கால்நடைப் பராமரிப்புக்கடன் உள்ளிட்டவற்றை வழங்க இருக்கிறோம். முக்கியமாக 158 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்புகளை இங்கு வழங்க இருக்கிறோம்.

நேற்றைய தினம் மட்டும், தமிழ்நாடு முழுவதும் 31 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுமார் 2 ஆயிரத்து 874 கோடி ரூபாய் அளவிலான வங்கிக்கடன் இணைப்பினை வழங்கினோம். உங்களுக்கு வழங்கப்படும் இந்த வங்கிக்கடன் இணைப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் வெறும் கடன் தொகையாகப் பார்க்கவில்லை. உங்களின் உழைப்பின் மீது அவர் வைத்திருக்கின்ற நம்பிக்கைத் தொகையாகத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

மகளிரின் ஏற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை நம் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். உதாரணத்திற்கு மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் மூலம் இதுவரை இந்த மூன்று வருடங்களில் மட்டும் 520 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறீர்கள். ஒவ்வொரு மகளிரும் இந்த விடியல் பயணம் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறீர்கள். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். `புதுமைப்பெண் திட்டம்’, `தமிழ்ப் புதல்வன் திட்டம்’ உயர்கல்வி பயில்கின்ற 7 லட்சம் மாணவ, மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

**ஒரு கோடியே 16 லட்சம் மகளிர்**

இது எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் கடந்த ஒரு வருடமாக மாதம் ஆயிரம் வீதம் 12 ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டங்களால்தான் பல்வேறு துறைகளில் தமிழ்நாடு இன்றைக்கு நம்பர்-ஒன் இடத்தில் இருக்கிறது.

இதையெல்லாம் நீங்கள், உங்களின் நண்பர்கள், உறவினர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். எப்படி எங்களுக்கு, நம் முதலமைச்சர் பிராண்ட் அம்பாசிடரோ, அதேமாதிரி நீங்கள் இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக ஒவ்வொருவரும் திகழ்ந்து அரசின் சாதனைகளை, மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் முதலமைச்சர் அவர்கள், உங்களை வெறும் பயனாளிகளாகப் பார்க்கவில்லை. அரசின் பங்கேற்பாளராகப் பார்க்கிறார்கள் என்று கூறிக்கொண்டு வந்திருக்கின்ற உங்கள் அத்தனைப் பேருக்கும் மீண்டும் எனது வணக்கத்தைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, முருகேசன், மாங்குடி, முன்னாள் அமைச்சர் தென்னவன், காரைக்குடி மேயர் முத்துதுரை, விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் ஆஷா ஆஜித் ஐ.ஏ.எஸ்., டென்னிஸ் வீரர் நந்தகிஷோர், செஸ் வீரர் ப்ரனேஷ்குமார், ராமநாதபுரம் கூடுதல் ஆட்சியர் வீர்பிரதாப் சிங் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் செல்வசுரபி, உதவி ஆட்சியர் ஆயிஷ் வெங்கட், பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ரவி, துணை மேயர் குணசேகரன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் நாகராணி செந்தில்குமார், ஊராட்சி மன்றத் தலைவர்கள், செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள், சேங்கை மாறன் மற்றும் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

## அமெரிக்கத் தமிழர்கள் அளித்த எழுச்சி வரவேற்பு!

### மருத்துவர் சோம இளங்கோவன் நெகிழ்ச்சிப் பதிவு!

அமெரிக்காவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமெரிக்க வாழ்தமிழர்கள் அளித்த வரவேற்பு குறித்து சிகாகோவில் 35 ஆண்டுகள் உள்பட அமெரிக்காவில் 53 ஆண்டுகளாக வசித்து வருபவரான புகழ்பெற்ற மருத்துவர் சோம இளங்கோவன் அவர்களின் நெகிழ்ச்சிப் பதிவு வருமாறு:

**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!**

**எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே !**

**“இது ஒரு கட்சியின் அரசல்ல**
**ஒரு இனத்தின் அரசு “**

**பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டிய வார்த்தைகள்.**

**அமெரிக்காவின் பல மாநிலங்களில் இருந்து திரண்டு வந்து பங்கேற்றனர்.**

**நாங்களும், விழாவிற்கு வந்திருந்த எங்கள் குழந்தைகளும் என்றென்றும் பேசி மகிழும் வரலாற்று நிகழ்ச்சியாக அமைந்து விட்டது.**

**இதுவரை எனக்குத் தெரிந்த 53 ஆண்டுகளில் சிகாகோ விமான நிலையத்தில் இப்படி ஒரு வரவேற்பு நிகழ்ந்ததில்லை!**

**“உங்கள் குடும்பத்தில் ஒருவர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருக்கின்றார் என்று உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள்” என்றதும் விண்ணதிர வாழ்த்து அந்த பெரிய அரங்கத்தையே குலுக்கியது.**

**1971 –ல் நாங்கள் அளித்த சிறிய வரவேற்பையே அன்புடன் பல முறை சொன்னவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.**

**மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தனது மகிழ்ச்சியைச் சொல்லாலும், குழந்தைகளை அன்புடன் தொட்டுப் பேசி மகிழ்ந்த செயலாலும், அனைவர்க்கும் அளித்த புன்னகையாலும் காட்டியதை வரலாறு சொல்லிக் கொண்டே இருக்கும்!**

**“திராவிட மாடல்” உலகறியும் கோட்பாடு ஆகியுள்ளது !**

**தமிழரின் பொற்காலம் தொடங்கி விட்டது !**

இவ்வாறு மருத்துவர் சோம இளங்கோவன் குறிப்பிட்டுள்ளார்.










மருத்துவர் **சோம இளங்கோவன்**